தமிழ் நாடு குழந்தைப் பராமரிப்புச் சேவைக்கான
கூட்டமைப்பின் செய்திமடல்

# தமிழ் நாடு ஃபோர்ஸஸ்

...ம்மா... ...ம்மா...

மழலை 18 ஜூன் 2010 சொல் 3




***அன்புடையீர் வணக்கம்!***

***நடுவன் அரசு தேசிய குழந்தைகளுக்கான கொள்கை 1974 பதிலாக புதிய தேசிய குழந்தைகளுக்கான கொள்கை வெளியிட உள்ளது. இதற்காக தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், குழந்தை உரிமை ஆர்வலர்களை கருத்து அளிக்குமாறு கேட்டுக் கொண்டது. இது குறித்து தமிழகத்தில் பல கட்டமாக பல தொண்டு நிறுவனங்களை கூட்டி முறையான பரிந்துரைகளை தயாரித்து அனுப்பி உள்ளது. இப்பரிந்துரைகளில் முக்கியமாக இளங்குழந்தையின் கவனிப்பு மற்றும் மேம்பாட்டை அடிப்படை உரிமையாக்க வேண்டும் என்பதாகும்.***

***போர்ஸஸின் தேசிய அளவில் நடைபெற்ற கருத்தரங்கில் வருங்காலத்தில் ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உரிமைகளை அடிப்படை உரிமையாக்கும் பிரச்சனையை முன்னேடுத்து செல்வதாகும். இதில் தமிழ்நாடு ஃபோர்ஸஸ் மிக முனைப்புடன் செயல் திட்டத்தை உறுப்பினர்களுடன் கலந்து பேசி முடிவு செய்ய உள்ளோம். இதற்காக அனைவரின் ஒத்துழைப்பையும், உதவியும், கோருகிறோம்.***

***–ஆசிரியர் குழு***

# மையக்குழு கூட்டம்

தமிழ்நாடு ஃபோர்ஸஸின் மையக்குழு கூட்டம் 27.05.2010 (வியாழக்கிழமை) அன்று நடந்தது. இந்தக் கூட்டத்தில் 22 மையக்குழு உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், அரியலூர், திருச்சி, தஞ்சாவூர், திண்டுக்கல், நீலகிரி, ஈரோடு மாவட்டங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முதல் கட்டமாக கடந்த ஐந்து மாத கால செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டன. பின்வரும் மாதங்களுக்குச் செயல் திட்டம் வகுக்கப்பட்டது.

கிராமசபை கூட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் பற்றியும் குழந்தைகள் மைய மேம்பாடு குறித்தும் ஆலோசனை செய்வதற்கு வலியுறுத்த வேண்டுதல்.

மாதிரி ஆங்கன்வாடி மையத்திற்கான அம்சங்கள் குறித்து ஒரு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க வேண்டும் எனவும் அதேபோல் தொழில் நிறுவனங்களை ஆங்கன்வாடி மைய மேம்பாட்டிற்காக தங்கள் நிறுவன சமூக பொறுப்பின் கீழ் முக்கியத்துவம் கொடுத்து வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள செய்ய வலியுறுத்தல்.

18 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமையை வழங்கச் செய்தல்.

தேசிய நலவாழ்வு மசோதா, கலைஞர் காப்பீட்டு திட்டம், கட்டாய ஆரம்ப சுகாதார நிலைய பிரசவம் மற்றும் தடுப்பூசித் திட்டம் பற்றிய விழிப்புணர்வு இதர கூட்டமைப்புக்களுடன் இணைந்து செயல்படுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

## தேசிய ஃபோர்ஸஸின் 20வது ஆண்டு நிறைவு விழா

தேசிய ஃபோர்ஸஸ் தொடங்கி 20வது ஆண்டுகள் நிறைவு பெற்றதன் நிகழ்வாக, அதன் செயல்பாடுகள் குறித்தும் மீள்பார்வையும் மற்றும் எதிர்கால திட்டமிடல் குறித்து ஒருநாள் கருத்தரங்கம் 21.04.2010 (புதன்கிழமை) அன்று புதுடில்லியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு, அசாம், ஹிமாச்சல பிரதேசம், தமிழ் நாடு, ஜார்கண்டு, உத்திரகாண்ட், டில்லி, இராஜஸ்தான், சத்திஸ்கர், குஜராத், மத்திய பிரதேசம் மற்றும் உத்திர பிரதேச மாநில பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் திரு. தேவேந்திர குமார் சிக்ரி, இ.ஆ.ப., அவர்கள், செயலாளர், மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு, முனைவர் திருமிகு. சமீதா ஹமீது அவர்கள், தேசிய திட்டக்குழு உறுப்பினர், திருமிகு. மீனா சுவாமிநாதன் அவர்கள், முனைவர். குமுத் சர்மா அவர்கள், முனைவர். வசந்தி ராமன் அவர்கள், ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.




அடுத்த அமர்வில் எதிர்கால திட்டத்திற்கான பொருள் பற்றி விவாதம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு ஃபோர்ஸஸின் அமைப்பாளர் கலந்துக் கொண்டு ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான குழந்தை பராமரிப்பு, கவனம் மற்றும் மேம்பாட்டை அடிப்படை உரிமையாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார். இறுதி அமர்வில் எதிர்கால திட்டமிடல் நடைபெற்றது.

## குழந்தைகளுக்கான தேசிய கொள்கை 1974

குழந்தைகளுக்கான தேசிய கொள்கை 1974ன் மீது மறுப்பரிசீலனை ஒரு கலந்தாய்வு கூட்டம் சென்னையில் 07-06-2010 அன்று நடைபெற்றது. இக்கலந்தாய்வின் முக்கிய நோக்கமானது குழந்தைகள் மீதான தேசிய கொள்கையில் மீள்பார்வை செய்வதற்கு போதுமான பரிந்துரைகளை அளிப்பதாகும். சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, பாதுகாப்பு, பங்கேற்பு, கல்வி மற்றும் வளர்ச்சி ஆகிய தலைப்புகளின் கீழ் கலந்தாய்வு நடத்தப்பட்டு பரிந்துரைகளும் பெறப்பட்டது. இப்பரிந்துரைகளானது 25.06.2010 அன்று வெர்ல்டு விஷன் இந்தியா அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ்நாடு ஃபோர்ஸஸ் தொண்டு நிறுவனங்களுடன் 16.06.2010 அன்று கூடி ஒரு கலந்தாய்வு கூட்டத்தினையும் நடத்தியது.

### கல்வி நிலை ஆண்டறிக்கை 2009 (ASER) வெளியீடு

சமக்கல்வி உரிமைக்கான மக்கள் இயக்கம் சார்பில் தமிழகம் முழுவதிலும் உள்ள கிராமப்புற குழந்தைகளின் கல்வி நிலை குறித்த ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சி சென்னையில் 28.04.2010 அன்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு ஃபோர்ஸஸின் அமைப்பாளர் கலந்துக் கொண்டு பேசுகையில் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த ஆசிரியர்கள், தரமான கல்வி மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 25% தனியார் பள்ளிகளில் அனுமதிப்பது உள்ளிட்ட அம்சங்களை உறுதி செய்ய ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. மகேந்திரன், முனைவர். வே. வசந்திதேவி, முனைவர். ச. சீ. இராஜகோபாலன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணை செயலாளர் திரு. சி. மகேந்திரன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

# மானிய கோரிக்கைகள்

16-04-2010 அன்று பள்ளிக் கல்வித்துறை மானிய கோரிக்கை.

20-04-2010 அன்று மக்கள் நல்வாழ்வு மானிய கோரிக்கை.

12-05-2010 அன்று சமூகநலத்துறை மானிய கோரிக்கை.

தமிழக அரசின் மேற்கண்ட மூன்று மானிய கோரிக்கைகளுக்காக தமிழ்நாடு ஃபோர்ஸஸ் இளங்குழந்தைகளின் உரிமைகளை உறுதி செய்யும் நோக்கத்துடன் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை முறையே 15-04-2010, 19-04-2010 மற்றும் 10-05-2010 ஆகிய தேதிகளில் கீழ்கண்ட சட்டமன்ற உறுப்பினர்களிடம் வழங்கியது.

1. திரு. டி. சுதர்சனம், இந்திய தேசிய காங்கிரஸ்
2. திரு. பீட்டர் அல்போன்ஸ், இந்திய தேசிய காங்கிரஸ்
3. திரு. ஓ. பன்னீர்செல்வம், அ.இ.அ.தி.மு.க
4. திரு. கே. ஏ. செங்கோட்டையன், அ.இ.அ.தி.மு.க
5. திருமிகு. பதர் சயீத், அ.இ.அ.தி.மு.க
6. திரு. ஜி. கே. மணி, பா. ம. க.
7. திருமிகு. பத்மாவதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
8. திருமிகு. பாலபாரதி, (மார்க்ஸிஸ்டு) கம்யூனிஸ்ட் கட்சி
9. திருமிகு. லதா, மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி
10. திரு. கு. செல்வம், விடுதலை சிறுத்தைகள் கட்சி
11. திரு. விஜயகாந்த், தே.மு.தி.க

**பள்ளி கல்வித் துறை மானிய கோரிக்கை மனுவில்**

1. அனைத்து பள்ளிகளிலும் தரமான ஒரே மாதிரியான கல்வி வழங்கிடும் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைபடுத்துவது.
2. அரசு தரமான மழலையர் கல்வி வழங்குவதற்காக அனைத்து பள்ளிகளிலும் மூன்று வயது நிரம்பிய குழந்தைகள் அனைவருக்கும் மழலையர் பிரிவு தொடங்குதல்.
3. நர்சரி பள்ளிகளுக்கான தனி இயக்குனரகம்.
4. கல்விக் குழுக்களை ஒருங்கிணைத்தல்.
5. அனைத்துப் பள்ளிகளுக்கும் பொருந்தும் தமிழ்நாடு கல்வி சட்டம் என்ற தலைப்பில் சட்டம் இயற்றப்படுதல்.
6. மாநில அளவில் குழந்தை உரிமைகளை பாதுகாக்கும் ஆணையம் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட வேண்டும்.

ஆகியவை சேர்க்கப்பட்டிருந்தது.

**மக்கள் நல்வாழ்வுதுறை மானிய கோரிக்கை மனுவில்**

1. ஆங்கன்வாடி மையங்களில் உள்ள இளங்குழந்தைகளுக்கு என மருத்துவ முகாம், பள்ளி குழந்தைகளுக்கு உள்ளது போல "பள்ளி சுகாதார தினம்" மற்றும் "மருத்துவ பரிந்துரை தினம்" என ஏற்பாடு செய்ய வேண்டும்.
2. சமீப காலங்களில் தமிழ்நாட்டில் ஒரே பிரசவத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தை பிறப்பு அதிகமாக உள்ளது. இதன் மூலம் தாய் சேய் நலன் காப்பது இக்கால கட்டத்தில் அத்தியாவசியமான ஒன்றாகும். சமுதாயத்தில், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் நலம் போன்றவற்றிக்கு புதிய திட்டம் ஒன்று வரையறுக்கப்பட்டு அறிவிக்கப்பட வேண்டும்.
3. ஆரம்ப சுகாதார நிலையத்தில் மட்டுமே தடுப்பூசி போடும் திட்டத்தை திரும்ப பெற்று முன்பு இருந்தது போல கிராம அளவில் ஆங்கன்வாடி மையங்களில் தடுப்பூசி போடும் திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

ஆகியவை சேர்க்கப்பட்டிருந்தது.



***சமூகநலத்துறை மானிய கோரிக்கை மனுவில்***

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் உள்ள ஆங்கன்வாடி பணியாளர் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

2. தமிழகத்தில் பெருவாரியான ஆங்கன்வாடி மையங்களில் பெயர் பலகைகள் இல்லாமல் இருக்கிறது. அனைத்து ஆங்கன்வாடி மையங்களிலும் பெயர் மற்றும் தகவல் பலகைகள் வைக்கப்பட வேண்டும்.

3. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் மருத்துவ முகாம் கொண்டு வரவேண்டும்.

4. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் நிதியுதவி வழங்கும் நன்கொடையாளருக்கு ''புரவலர் திட்டத்தினை" ஏற்படுத்த வேண்டும்.

5. கிராம அளவிலான மேம்பாட்டுக் குழு மற்றும் நகர அளவிலான மேம்பாட்டுக் குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட நாளில கண்டிப்பாக கூடி அதனுடைய நடவடிக்கைகளை அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற அரசு ஆணை ஒன்று வெளியிட்டு அதனை பணியாளர்களின் மாதாந்திர கூட்டத்தில் வலியுறுத்த வேண்டும்.

6. மாநில அளவில் குழந்தை உரிமைகளை பாதுகாக்கும் ஆணையம் உருவாக்கப்பட வேண்டும்.

7. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் சமுதாய பங்கேற்பை பலப்படுத்துவதற்காககவும், ஆங்கன்வாடியின் பணிகளைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அரசு நவம்பர் 21ஆம் தேதியை அங்கன்வாடி தினமாக அறிவிக்க வேண்டும்.

ஆகியவை சேர்க்கப்பட்டிருந்தது.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்ட செயல்பாடுகள் குறித்த ஆய்வு வெளியீடு - புதுடில்லி

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்ட செயல்பாடுகள் குறித்த ஆய்வு தமிழ்நாடு இளங்குழந்தைகள் பராமரிப்பு சேவைக்கான கூட்டமைப்பு, ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பொது சுகாதார வளமையம் அகிய மூன்று அமைப்புகளால் இணைந்து கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் தருமபுரி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தை தாய்மார்கள் மற்றும் சிறுகுழந்தைகளுக்கு எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றியது. இந்த ஆய்வின் முடிவுகள் குறித்த புத்தக வெளியீட்டு விழா 02-06-2010 அன்று புதுடில்லியில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு ஃபோர்ஸஸின் சார்பாக அதன் அமைப்பாளர் கலந்துக் கொண்டார். இதனை புதுடில்லியில் அமைந்துள்ள பொது சுகாதார வளமையம் ஏற்பாடு செய்திருந்தது.

**ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் உங்களின் பார்வைக்காக**

- 93% பயனாளிகளின் கணவன்மார்கள் அமைப்புசாரா தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.
- பெரும்பாலான பெண்கள் கருவுற்ற காலத்தில் பதிவு செய்துள்ளனர். ஆனால் கருவுற்ற காலத்தில் ஒருவர் கூட பணம் பெறவில்லை.
- குழந்தை பிறந்து ஆறு மாதத்திற்குள் மொத்த தொகையையும் முதல் தவணையில் பெற்று விட்டனர்.
- பெறப்பட்ட தொகையானது மருத்துவ செலவு, உணவு, சேமிப்பு மற்றும் முதலீடு ஆகியவற்றுக்கு பயனாளிகள் செலவிட்டுள்ளனர்.

- ☛ கிராம சுகாதார செவிலியர்கள் கூறுகையில் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தொகையானது பெண்களின் நலவாழ்வு மற்றும் ஊட்டசத்தினை மேம்படுத்துவதற்காக பயன்படுகிறது என்கிறார்கள்.
- ☛ குழந்தை எடைகுறைவுடன் பிறத்தலை தவிர்த்தல் மற்றும் கர்ப்பகாலத்தில் பெண்கள் ஊட்டச்சத்தான உணவை எடுத்துக் கொள்ளுதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக கிராம சுகாதார செவிலியர்கள் தெரிவிக்கின்றனர்.

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் சமுதாய பங்கேற்பினை பலப்படுத்துதல்.**

தமிழ்நாடு ஃபோர்ஸஸ் மாவட்டவாரியாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் சமுதாய பங்கேற்பினை பலப்படுத்துதல் என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக கலந்தாய்வு கூட்டத்தினை மாவட்டவாரியாக நடத்தி வருகின்றது. மாவட்டங்களில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் / உறுப்பினர்கள் உதவியுடன் இக்கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. தொண்டு நிறுவன பிரதிநிதிகள், சுயஉதவி குழுக்களை சார்ந்தவர்கள், ஊராட்சிமன்ற தலைவர்கள், பிரதிநிதிகள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி மாவட்ட திட்ட அலுவலர்கள், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆங்கன்வாடி பணியாளர்கள் போன்றவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து பரவலாக இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். இதுவரையில் இருபத்து ஆறு மாவட்டங்களில் இக்கலந்தாய்வு கூட்டமானது நடத்தப்பட்டுள்ளது. கடந்த முறை வெளியான ம்மா... செய்தி மடல்களில் இருபத்து ஐந்து மாவட்டங்களில் நடத்தப்பட்டதன் விவரம் அளிக்கப்பட்டிருந்தது. இறுதியாக இருபத்து ஆறாவதாக 28-05-2010 அன்று சுவாமி விவேகானந்தா பண்பாட்டு நிறுவனம் மூலமாக திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டியில் நடத்தப்பட்டது.

## சிறப்பு பொருளாதார மண்டலம்

சிறப்பு பொருளாதார மண்டலம் குறித்து தேசிய மக்கள் தணிக்கை ஏப்ரல் 19 மற்றும் 20 தேதிகளில் புது தில்லியில் தீன்மூர்த்தி பவனில் நடைபெற்றது. ஆந்திரா, கர்நாடகா, மஹாராஷ்டிரா, கோவா மற்றும் தமிழ்நாட்டின் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டு நடுவர்கள் முன்பு சிறப்பு பொருளாதார மண்டலத்தின் பாதிப்புகளை முன்வைத்தனர். தமிழ்நாட்டிலிருந்து 10 நபர்கள் கொண்ட குழுவினர் கலந்துக் கொண்டனர். தமிழ்நாடு ஃபோர்ஸஸின் அமைப்பாளர் கலந்துக் கொண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற சிறப்பு பொருளாதார மண்டல மக்கள் தணிக்கை அறிக்கையை சமர்ப்பித்தார்.

### சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை 2010-2011 ஆம் நிதியாண்டிற்கான புதிய அறிவிப்புகள்

1. மலைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் மையங்களுக்கு தாழ்தள பெஞ்சுகள் 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

2. அரசு அலுவலகம் மற்றும் நீதிமன்ற வளாகங்களிலும் தேவைகேற்ப மழலையர் காப்பக வசதி (creche) மத்திய அரசின் உதவியுடன் இவ்வாண்டு அமைக்கப்படும்.

3. இருபது ஆயிரம் குழந்தைகள் மையங்களுக்கு குழந்தைகளின் பயன்பாட்டிற்காக 40 இலட்சம் ரூபாய் செலவில் கோரைப் பாய் வழங்கப்படும்.

4. முப்பது மாவட்டங்களில் உள்ள 10,000 குழந்தைகள் மையங்களுக்கு, மையத்திற்கு 600 ரூபாய் வீதம் எடை எடுக்கும் கருவிகள் மொத்தம் 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

5. பத்தாயிரம் குழந்தைகள் மையங்களுக்கு தானிய சேமிப்பு கலன்கள் (Stainless steel storage Bins) வழங்கிட 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# குழந்தைகளின் கல்வி உரிமைச் சட்டம் மற்றும் தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணங்கள் வசூல் முறைப்படுத்துதல்) சட்டம் 2009 தமிழகத்தில் அமலாக்கம் செய்வதற்கான கலந்தாய்வு கூட்டம்

03-06-2010 அன்று சென்னையில் குழந்தை உழைப்பு எதிர்ப்பு பிரச்சாரம் - தமிழ்நாடு சார்பில் குழந்தைகளின் இலவச, கட்டாய கல்வி உரிமை சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணங்கள் வசூல் முறைப்படுத்துதல்) சட்டம் 2009ஐ தமிழகத்தில் அமலாக்கம் செய்வதற்கான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் முனைவர் அருணா ரத்தினம் அவர்கள், கல்வி நிபுணர், யுனிசெஃப் தமிழ்நாடு மற்றும் கேரளா, சிறப்புரையாற்றினார். மூத்த கல்வியாளர், சமக்கல்வி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் அமைப்பாளர் முனைவர் ச. சீ. இராஜகோபாலன் அவர்கள் தமிழகத்தில் சமச்சீர் கல்வியின் நிலை மற்றும் வியாபாரமாகும் உயர் கல்வியினால் பள்ளி கல்விக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்கினார். மதுரை காமராஜர் பல்கலைக்கழக நிலைக்குழு உறுப்பினர் பேராசிரியை இரா. ரோகினிதேவி அவர்கள் அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் கலை அறிவியல் கல்லூரிகளை ஒருமை பல்கலைக்கழகமாக மாற்றுவதால் ஏற்படும் தாக்கங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணங்கள் வசூல் முறைப்படுத்துதல்) சட்டம் 2009 மற்றும் விதிகள் குறித்த விவாதம் நடைபெற்றது. இதில் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009ன் மாதிரி விதிகள் குறித்து தமிழ்நாடு ஃபோர்ஸஸின் அமைப்பாளர் அவர்கள் விளக்கவுரையாற்றினார். இம்மாதிரி விதிகளில் அருகாமைப் பள்ளி என்பதனை மக்கள் தொகை மற்றும் கிராமத்தின் பரப்பளவு ஆகிய இரண்டின் அடிப்படையில் வரையறுக்கப்பட வேண்டும். பள்ளி வரைப்படம் தயாரிக்கப்பட வேண்டும். தனியார் பள்ளிகளில் சேர்க்கப்படும் 25% நலிவுற்ற மற்றும் வாய்ப்பு குறைவான வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு எவ்வித பாகுபாடும் இழைக்கப்படக்கூடாது. சில மாநிலங்களில் உருவாக்கியதைப் போல மாநில குழந்தை உரிமைகள் ஆணையத்தை தமிழகத்தில் உடனடியாக உருவாக்கி இச்சட்ட அமலாக்கத்தை கண்காணிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தை செயல்படுத்துவதற்காக மாநில ஆலோசனைக் குழுவை அமைத்திட வேண்டும். பள்ளி மேலாண்மைக்குழு பள்ளி வளர்ச்சி திட்டத்தினை ஆண்டுதோறும் உருவாக்கி அதில் குழந்தைகளின் பங்கேற்பினை உறுதி செய்ய வேண்டும். இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள், ஊனமுற்ற குழந்தைகள், மறு குடியமர்த்தப்பட்ட குழந்தைகள், சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பள்ளி முன்பருவக் கல்வியினை உரிமையை அரசாங்கம் வழங்கிட வகை செய்ய வேண்டும் என பல அம்சங்களை உள்ளடக்கியதாக இச்சட்டத்தின் மாதிரி விதிகள் அமைய வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தி பேசினார்.

## ஆங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் காலியிடங்களை உடனே நிரப்ப கோரி தமிழ்நாடு ஃபோர்ஸஸ் மனு வழங்கியது.

ஒங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பல ஆங்கன்வாடி மையங்களில் பணியாளர் அல்லது உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதை சுட்டிக்காட்டி அப்பணியிடங்களை உடனே நிரப்பக் கோரி 10-06-2010 அன்று தமிழ்நாடு ஃபோர்ஸஸ், தமிழக முதல்வர், டாக்டர் மு. கருணாநிதி அவர்களுக்கும், மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களுக்கும், திருமிகு மீனாட்சி ராஜா கோபால், இ. ஆ. ப. முதன்மை செயலாளர் மற்றும் சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களுக்கும், திரு. ராம் மோகன் ராவ், இ. ஆ.ப. முதன்மை செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு, ஆகியோருக்கு தனித்தனியே மனுக்களை அனுப்பியுள்ளது. அம்மனுவின் கூறப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் சென்றுக் கொண்டு இருக்கும் தமிழக அரசு சமூக நலம் மற்றும் குழந்தை மேம்பாட்டிற்காக பல முக்கிய திட்ங்களை செயல்படுத்தி வருகின்றது. அதில் இந்தியாவிலேயே தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சிறப்பாக செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இயங்கிவரும் ஆங்கன்வாடி மையங்கள் குழந்தைகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஆங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளரின் பணிகள் மிக முக்கியமானது.

தமிழகத்தில் 54,433 ஆங்கன்வாடி மையங்கள் செயல்பட்டுவருகின்றது. இதில் பல மையங்களில் பணியாளர் அல்லது உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. இது குறித்து வழக்கு உயர்நீதிமன்றத்தில் (W.P. No. 10748) மேன்மைதங்கிய நீதியரசர் சந்துரு அவர்களின் 19-04-2010 அன்றைய தீர்ப்பின்படி ஆங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் அரசு ஊழியர் என்றும் அவர்களுக்கும் தமிழ்நாடு Act 45/1994ன் படி அவர்கள் அரசு ஊழியர் என்று தேர்வு செய்யப்பட வேண்டும். தற்பொழுது மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் செயல்படும் தேர்வு குழு செல்லாது என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளதால், அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டு உள்ளபடி வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவோ அல்லது தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாகவோ பணியாளர்களை தேர்ந்தெடுத்தால் ஆங்கன்வாடியின் தரம் உயர்வதற்கும் சமூக நீதி நிலைநாட்டுவதற்காகவும் இருக்கும் என நம்புகிறோம். இதனால் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக உடனடியாக பதிவு மூப்பு அடிப்படையில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை வழங்கியும் பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் செய்யுமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என்று அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

## நல்வாழ்விற்கான உரிமை – பயிற்சி

மக்கள் நல்வாழ்வு இயக்கம் திருச்சியில் 29-04-2010 அன்று நலவாழ்வு உரிமை குறித்து ஒரு பயிற்சியினை நடத்தியது. இப்பயிற்சியில் தமிழகத்தில் தடுப்பூசி திட்டம், கட்டாய மருத்துவமனை பிரசவம், கலைஞர் காப்பீட்டு திட்டம் மற்றும் தேசிய நலவாழ்வு மசோதா ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் தமிழ்நாடு ஃபோர்ஸஸின் அமைப்பாளர் கலந்துக் கொண்டு கலைஞர் காப்பீட்டு திட்டம் குறித்து விளக்கவுரை நிகழ்த்தினார். பயிற்சியில் தமிழ்நாடடிலிருந்து பல தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.



# அனைத்து ஆங்கன்வாடியிலும் பெயர் மற்றும் தகவல் பலகை வைப்பதற்கு தமிழ்நாடு ஃபோர்ஸஸ் மனு வழங்கியது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் முதன்மை செயலாளர் மற்றும் சிறப்பு ஆணையர் திருமிகு. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப. அவர்களுக்கு 17-05-2010 அன்று அளித்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ள கோரிக்கையின் சுருக்கம்.

தமிழகத்தில் பெருவாரியான ஆங்கன்வாடி மையங்களில் பெயர் பலகைககள் இல்லாமல் இருக்கிறது. அனைத்து ஆங்கன்வாடி மையங்களிலும் பெயர் பலகைகள் வைக்கப்பட்டு அதில் பணியாளர் மற்றும் உதவியாளரின் பெயர், மேற்பார்வையாளரின் பெயர், விலாசம், தொலைபேசி எண், கைப்பேசி எண், மையத்தின் வேலை நேரம், மைய எண் மற்றும் விலாசம் எழுதப்பட்டால் நன்றாக இருக்கும். அனைத்து ஆங்கன்வாடி மையங்களிலும் வழங்கப்படும் சேவைகள் குறித்து மையத்தின் உள்ளே தகவல் பலகை வைக்கப்பட வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005இன்படி பொதுமக்களுக்கு அனைத்து தகவல்களும் வெளிப்படையாக சென்றடைய வேண்டும் என்பது ஒரு சரத்தாகும் என்று அக்கோரிக்கை மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# உணவு உரிமைக்கான தர்ணா

உணவு உரிமைக்கான பிரச்சாரக் குழு உடனடியாக பாராளுமன்றத்தில் உணவு உரிமைக்கான மசோதா நிறைவேற்ற வேண்டும், அனைவருக்கும் பொது விநியோக திட்டத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்து உத்திரவாதம் தரவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து ஏப்ரல் 16-19 தேதிகளில் ஜன்தர் மந்திர் புது டில்லியில் தர்ணா நடைபெற்றது. தமிழ்நாட்டின் பிரதிநிதியாக தமிழ்நாடு ஃபோர்ஸஸின் அமைப்பாளர் தர்ணாவில் கலந்துக் கொண்டு தமிழ்நாட்டின் உணவுக்கான உரிமை குறித்து உரையாற்றினார். தர்ணாவில் பல மாநிலங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.





பெறுநர்

புத்தக அஞ்சல்

அனுப்புநர் :
**தமிழ் நாடு போர்ஸஸ்**
C/o இளங் குழந்தையின் உரிமை பேணும் நிறுவனம்
எண்: 3, அய்யாவு தெரு,
அய்யாவு குடியிருப்பு,
சென்னை - 600 029. **Ph.: 2363 1126**
**E-mail : tnforces@yahoo.com**
**web page: www.tnforces.com**

தனிச்சுற்றுக்கு மட்டும்